சுருக்கம்

நிலம் எடுப்பு – திருவாரூர் நகராட்சியில் கழிவுநீர் உந்து நிலையம் அமைக்க நிலம் கிரையம் பெற நிர்வாக அனுமதி வழங்கி ஆணை – வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி.3) துறை

அரசு ஆணை(நிலை) எண்: 88 நாள் : 07.05. 2010

படிக்க : -

1. அரசு ஆணை (3டி) எண்.16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.01.09.2006.
2. அரசாணை எண். 115, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.06.10.2006.
3. நகராட்சி நிர்வாக இயக்குநரின் கடிதம் ந.க.எண். 40864/2008/ டிபி4 , நாள்.13.03.2010.
4. அரசு ஆணை (நிலை) எண்.28, தமிழ் வளர்ச்சி மற்றும் அறநிலையங்கள் மற்றும் செய்தித் (அநி3.1) துறை, நாள். 21.01.2010.

------

ஆணை:

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் திருவாரூர் நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டத்தை ரூ.39.26 கோடி செலவில் நிறைவேற்றவும், ரூ.68.00 இலட்சங்கள் செலவில் ஆண்டு பராமரிப்பினை மேற்கொள்ளவும் நிர்வாக அனுமதி வழங்கி ஆணைகள் வெளியிடப்பட்டன.

2) மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் நகராட்சி நிர்வாக இயக்குநர் திருவாரூர் நகராட்சி ஆணையர், திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோவிலுக்கு சொந்தமான வார்டு எண்.2, பிளாக் எண்.46, நகரளவு எண்.2760/2–ல் 1023 சதுர மீட்டர் (11000 ச.அடி) பரப்பளவு கொண்ட நிலத்தில் பாதாள சாக்கடை திட்டத்தின் கீழ் கழிவு நீரேற்று நிலையம் III அமைக்க நிலம் தேர்வு செய்யப்பட்டுள்ளது என்றும் மேற்படி 11000 சதுரடி நிலத்திற்கு அரசு விலை வழிகாட்டு மதிப்பு சதுரடிக்கு ரூ.180.30 என்றும் மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி, 150 சதவிகிதம் விலை ரூ.270.45 நிர்ணயம் செய்யப்பட்டு 11000 சதுர அடிக்கு (11000 சதுரடி X270.45) ரூ.29,74,950/– + பதிவு கட்டணம் 9 சதவிகிதம் ரூ.2,67,746/– ஆக மொத்தம் ரூ.32,42,696/– ஆகும் என்று தெரிவித்துள்ளார். மேலும் பாதாள சாக்கடை திட்டத்திற்கு நகராட்சியின் பங்களிப்பு தொகையாக, திட்டத்தை செயல்படுத்தும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு நகராட்சியால் செலுத்தப்பட வேண்டிய ரூ.638/– இலட்சத்திலிருந்து நில விலை மற்றும் பதிவுக் கட்டணம் ரூ.32,42,696/– செலுத்தி நிலத்தை கிரையம் பெற, 30.10.2008 நாளிட்ட தீர்மானம் எண். 834–ன் அடிப்படையில் திருவாரூர் நகராட்சி ஆணையரின் செயற்குறிப்பினை ஏற்று திருவாரூர் நகராட்சியில் மேற்படி இடத்தில் கழிவு நீர் உந்து நிலையம் III அமைக்க, திட்டத்தின் அவசியம் கருதி முன் நுழைவு செய்துகொள்ள அருள்மிகு தியாகராஜசுவாமி

திருக்கோவிலுக்கு சொந்தமான வார்டு எண்.2, பிளாக் எண்.46, நகரளவு எண்.2760/2–ல் 1023 சதுர மீட்டர் (11000 ச.அடி) நிலத்தினை அதன் மதிப்பு ரூ. 29,74,950/– மற்றும் பதிவு கட்டணம் ரூ.2,67,746 ஆக மொத்தம் ரூ.32,42,696/–ஐ இந்து சமய அற நிலையச் சட்டப் பிரிவு 34–ன் கீழ் விற்பனை நிலுவையில் இருக்க, இந்து சமய அற நிலையத் துறைக்கு நகராட்சி பொது நிதியிலிருந்து செலுத்தி கையகப்படுத்திட நிர்வாக அனுமதி வழங்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

3) மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட ஆணையில் திருவாரூர் நகராட்சியின் பாதாள சாக்கடை திட்டத்திற்காக திருவாரூர், அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோவிலுடன் இணைந்த அபிஷேகக் கட்டளைக்கு சொந்தமான நிலத்தினை தமிழ்நாடு இந்து சமய அறநிலைக் கொடைகள் சட்டம் 22/1959 சட்டப்பிரிவு 34–ன் கீழ் விற்பனை செய்வதற்கும், மேற்படி நில விற்பனை நடவடிக்கை நிலுவையில் இருக்க கேட்புத் துறையினர் கேட்டுக் கொண்டுள்ளபடி அவசர அவசியத்தை கருதி முன்நுழைவு செய்து கொள்வதற்கு கேட்புத்துறையினர் நில விற்பனைத் தொகை ரூ.29,74, 950/–ஐ வைப்புத் தொகையாக செலுத்திய பின்னரே முன்நுழைவு செய்வதற்கான அனுமதி பெற வேண்டும் என்றும், மேற்படி நிலத்தில் உள்ள குத்தகைதாரர்களிடமிருந்து நேரடியாக சுவாதீனம் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற நிபந்தனைகளுடன் அனுமதி வழங்கி ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளது.

4) நகராட்சி நிர்வாக இயக்குநர் மேலனுப்பியுள்ள திருவாரூர் நகராட்சி ஆணையரின் செயற்குறிப்பினை அரசு ஏற்று, திருவாரூர் நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டத்தின் கீழ் கழிவு நீரேற்று நிலையம்-III அமைக்க திட்டத்தின் அவசியம் கருதி முன்நுழைவு செய்து கொள்ள அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோவிலுக்கு சொந்தமான வார்டு எண்.2, பிளாக் எண்.46, நகரளவு எண்.2760/2–ல் 1023 சதுர மீட்டர் (11000 ச.அடி) நிலத்தினை, அதன் மதிப்பு ரூ.29,74,950/– மற்றும் பதிவு கட்டணம் ரூ.2,67,746 ஆக மொத்தம் ரூ.32.42.696/–ஐ இந்து சமய அற நிலையச் சட்டப் பிரிவு 34–ன் கீழ் விற்பனை நிலுவையில் இருக்க, இந்து சமய அறநிலையத் துறைக்கு நகராட்சி பொது நிதியிலிருந்து செலுத்த நிர்வாக அனுமதி வழங்கி அரசு ஆணையிடுகிறது.

//ஆளுநரின் ஆணைப்படி//

நிரஞ்சன் மார்டி,<br>
அரசுச் செயலாளர்.

**பெறுநர்**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சேப்பாக்கம், சென்னை–600 0 05.<br>
நகராட்சி ஆணையர், திருவாரூர் நகராட்சி.<br>
ஆணையர், இந்து சமய அறநிலையத் துறை, சென்னை – 34

**<u>நகல்:</u>**

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைச் செயலாளரின் தனிச் செயலாளர், சென்னை – 600 009.<br>
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை ( அந.2) துறை, சென்னை– 600 009.<br>
தமிழ் வளர்ச்சி மற்றும் அறநிலையங்கள் மற்றும் செய்தி (அநி3.1) துறை,<br>
சென்னை– 600 009.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.